**தலைப்பு 435 – கிராமிய வீதிகள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சு**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

கிராமிய வீதிகள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் கிராமிய வீதிகள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2022 மே 23 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் அமைச்சிற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 ஜூன் 28 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது. இந்த அறிக்கையில் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கங்களை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கிராமிய வீதிகள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு அமைச்சின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

**1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் செய்யப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

**1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.6.1 கட்டுநிதி இணக்கக் கூற்று**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 208 இன் கீழ் ஏனைய செலவின தலைப்புக்களுக்காக மேற்கொள்ளப்பட்டிருந்த செலவினம் ரூபா 227,865,951 ஆன போதும், அச் செலவினம் ரூபா 227,891,242 ஆக கட்டுநிதி இணக்கக் கூற்றில் காட்டப்பட்டது. | கணக்காய்வு அவதானிப்பை ஏற்றுக் கொள்கிறேன். கூட்டுத் தொகையை குறிப்பிடும் போது தவறொன்று ஏற்பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டது. இறுதி கணக்கை மீள் தயாரிக்கப்படுவதுடன் ரூபா 25,291 ஆன வித்தியாசத்தை இனங்கண்டுதுடனே சரிசெய்ய நடவடிக்கை எடுக்கிறேன். | நிதிப்பிரமாணம் 208 இன் கீழ் மேற்கொள்ளப்பட்ட செலவினம் மற்றும் கட்டுநிதி இணக்கக்கூற்றின் மீதி சமனாக வேண்டும். |

**1.6.2 ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அமைச்சினூடாக முன்னைய ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 2,454,659 ஆன நிதியல்லாத சொத்துக்களை CIGAS நிகழ்சித் திட்டத்திற்கு உட்படுத்தி இருக்காததுடன் அதன் காரணமாக மீளாய்வாண்டில் திசெம்பர் 31 திகதியன்று ஆதனங்கள் பொறிகள் மற்றும் உபகரண மீதி மற்றும் ஆதனங்கள் பொறிகள் மற்றும் உபகரணத் தொகுதி அப்பெறுமானத்தால் குறைத்து காட்டப்பட்டிருந்தன. | கணக்காய்வு அவதானிப்பை ஏற்றுக் கொள்கிறேன். 2020 ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களை cigas நிலையான சொத்து பதிவேட்டிற்கு உட்படுத்தியிருக்காததுடன் தற்போது ஆரம்ப மீதியாக 2022 ஆண்டிற்கு cigas நிகழ்சித் திட்டத்திற்கு உட்படுத்தப்பட்டுள்ளது. | ஆதனங்கள் பொறிகள் உபகரணக் கொள்வனவுகள் சரியான பெறுமதியில் CIGAS நிலையான சொத்து பதிவேட்டிற்கு உட்படுத்தி கணக்கீடு செய்ய வேண்டும். |

### 1.6.3 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிராமை

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிப்பிரமாணம் 446(2) பிரகாரம் மேற்பார்வை உத்தியோகத்தரினால் காசுப் புத்தகம் கையொப்பமிடப்பட்டிருக்கவில்லை. மேலும் காசோலை இலக்கம், செலவின தலைப்பு மற்றும் கொடுப்பனவு விபரத்தையும் உரிய முறையில் உள்ளடக்கி இருக்கவில்லை. | கணக்காய்வு அவதானிப்பை ஏற்றுக் கொள்கிறேன். | ஏற்பாடுகள் பிரகாரம் காசுப் புத்தகத்தை நாளாதுவரையாக பேணிக்கொள்ள வேண்டும். |
| (ஆ) | நிதிப்பிரமாணம் 420(ஆ) மற்றும் 245(3) பிரகாரம் செலவின பேரேட்டை நாளாவதுவரையாக்கி இருக்கவில்லை. | கணக்காய்வு அவதானிப்பை ஏற்றுக் கொள்கிறேன். | ஏற்பாடுகள் பிரகாரம் செலவின பேரேட்டை நாளாதுவரையாக பேணிக்கொள்ள வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்.

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | அமைச்சிற்காக வழங்கியிருந்த மொத்த மீண்டுவரும் மற்றும் மூலதன ஏற்பாடு ரூபா 30,276 மில்லியனானதுடன் மீளாய்வாண்டு இறுதியளவில் அவற்றில் ரூபா 1,946 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அமைச்சின் தேறிய மீதி ரூபா 28,330 மில்லியன் அதாவது மொத்த தேறிய ஏற்பாட்டில் 94 சதவீதமானது. அவ்வாறே மேற்குறிப்பிட்ட தேறிய மீதியின் 99 சதவீதம் அதாவது ரூபா 28,325 மில்லியன் மூலதன ஏற்பாடு மீதியென அவதானிக்கப்பட்டதுடன் அதனுள் மீள்நிரப்பு மதிப்பீட்டின் கீழ் ஒதுக்கியிருந்த ரூபா 5,200 மில்லினான ஏற்பாடும் பூரணமாக செலவிடப்படாது எஞ்சியிருந்தது. | கொரோனா தொற்று நிலவிய நிலைமை காரணமாக மீண்டுவரும் செலவுகள் எஞ்சியிருந்தன. | ஏற்பாட்டை வினைத்திறனாக பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |
| (ஆ) | நிதிக்கூற்றுக்களுடன் சமர்பிக்க வேண்டிய ஏசீஏ – 2 (iii) படிவம் பிரகாரம் திருத்திய செலவின மதிப்பீட்டை சரியாக குறிப்பிடாத காரணத்தால் ஆரம்ப செலவினம் மற்றும் திருத்திய | பதில் வழங்கப்படவில்லை. | ஏசீஏ படிவத்தை சரியாக சமர்ப்பிக்க வேண்டும். |

செலவினத்திற்கிடையிலான வித்தியாசத்தை சதவீதமாக சரியாக சமர்ப்பித்திருக்கவில்லை.

**2.2 கட்டுநிதி முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அமைச்சின் ஊடாக கோரிய கட்டுநிதி மற்றும் நிதிப்பிரமாணம் 208 கீழ் மாவட்ட செயலகத்திற்கு ஒதுக்கியிருந்த ஏற்பாடு முறையே ரூபா 522 மில்லியன் மற்றும் ரூபா 6,921 மில்லியன் ஆனது. எவ்வாறாயினும், அமைச்சின் ஊடாக கோரிய கட்டுநிதிகளிலிருந்து ரூபா 392 மில்லியன் அதாவது 75 சதவீதம் மாத்திரம் கிடைத்திருந்ததுடன் மாவட்ட செயலகத்திற்கு ஒதுக்கி வழங்கியிருந்த ஏற்பாட்டிலிருந்து பயன்படுத்தியிருந்த காசு ரூபா 197 மில்லியன் அதாவது 3 சதவீதம் மாத்திரமே ஆனது. | பாதீட்டினூடாக ரூபா 30,276 மில்லியன் ஒதுக்கியிருந்த போதும் கட்டுநிதி கோருகையில் கையிறுப்பிலுள்ள பட்டியல்களிற்காக மாத்திரம் கட்டுநிதி கோர வேண்டி ஏற்படுகிறது. அவ்வாறே பிரதேச செயலகத்திற்காக அமைச்சினூடாக கட்டுநிதி வழங்காததுடன் ஏற்பாடு ஒதுக்கும் கடிதத்தின் பிரதி திறைசேரி செயற்பாட்டு திணைக்களத்திற்கு அனுப்பப்படுகிறது. | ஒக்கிய ஏற்பாட்டை வினைத்திறனாக பயன்படுத்த வேண்டும். |

**2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | |
| | (i) நிதிப்பிரமாணம் 66 மற்றும் 66(2) | நி.பி. 66(2) பிரகாரம் ஏதேனும் நிகழ்சித் திட்டத்திற்கு மூலதன செலவினத்தின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்ட நிதியை அதற்கு வெளியில் மாற்ற முடியாத போதும் மாதிரி பரிசோதனையின் பிரகாரம் நிகழ்சித் திட்டம் 01 இல் மேலதிக நேர செலவு ரூபா 785,398 இனை நிகழ்சித் திட்டம் 02 இன் மூலதன செலவினத்தால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | 2021.03.20 திகதிய கிராம பாதை அபிவிருத்தி நிகழ்சித் திட்டத்தை செயற்படுத்துதல் எனும் தலைப்பிலான உள்ள சுற்றறிக்கையின் ஏற்பாடுகள் பிரகாரம் நிர்வாக செலவுகளை ஓதுக்கிக் கொள்ள முடியுமாகையால் அதன் கீழ் எரிபொருள், மேலதிக நேர கொடுப்பனவு, காகிதாதிகள் போன்ற கணக்குகளுக்கு மேல் மூலதன செலவின தலைப்பின் கீழ் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணங்களுக்கு இணங்க வேண்டும். |
| | (ii) நிதிப்பிரமாணம் 396 | 2021 திசெம்பர் 31 திகதி விநியோகிக்கப்பட்ட போதும் கொடுப்பனவிற்கு | தற்போது ஊழியர் சேமலாப நிதியத்திற்குரிய காசோலைகள் தவிர எஞ்சிய பணம் | - மேற்படி - |

| | | | | |
|---|---|---|---|---|
| | | சமர்ப்பிக்கப்படாத ஏற்புக் காலம் 06 மாதங்களை விஞ்சிய கூட்டுத் தொகை ரூபா 792,608 ஆன காசோலைகள் தொடர்பாக நிதிப்பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தீர்க்கப்பட்டுள்ளது. அக் காசோலைகளை தீர்க்கவும் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் எதிர்வரும் மாத்தினுள் தீர்க்க முன்வருவதாக அறிவிக்கிறேன். | |
| (iii) | நிதிப்பிரமாணம் 571 | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திததி பொது வைப்பு மீதி ரூபா 72,494,340 ஆனதுடன் அவற்றில் 02 ஆண்டுகளை விஞ்சிய மீதி ரூபா 32,085,651 தொடர்பில் நிதிப்பிரமாணம் 571 பிரகாரம் தேவையான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கணக்காய்வு அவதானிப்பை ஏற்றுக் கொள்கிறேன். | - மேற்படி - |
| (ஆ) | பொது நிர்வாகம் மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் நிருவனங்களின் பணிப்பாளர் நாயகம் (பதிற் கடமை) இன் 2019 மார்ச் 15 திகதிய இலக்கம் ஈஎஸ்டீ-4/03/எம்எஸ்எப்/0406 கொண்ட கடிதம். | வாரத்திற்கு 20 மணித்தியாலங்களை விஞ்சாத வகையில் மேலதிக நேர கொடுப்பனவு அங்கீகரிக்க முடியுமான போதும் மாதிரிப் பரிசோதனையின் பிரகாரம் அவ் எல்லையை விஞ்சி 12 அலுவலர்களுக்கு கூட்டுத் தொகை ரூபா 411,779 ஆன மேலதிக நேர கொடுப்பனவு கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது. | அமைச்சின் மிகப் பாரியளவான பணிகளை மிகக் குறைந்த ஆளணியினரை கொண்டு மேற்கொள்ள வேண்டி ஏற்பட்டதால் அவர்களினால் மேற்கொண்ட கடமைகளிற்காக அவர்களுக்கு மேலதிக நேர கொடுப்பனவு செலுத்த வேண்டி ஏற்பட்டது. | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்க வேண்டும். |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

### 3.1.1 கடமைகள் நிறைவேற்றப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 ஆண்டில் கிராமிய பாலங்கள் கருத்திட்டத்திற்காக ரூபா 9,500 மில்லியன் மற்றும் கிராமிய பாதைகள் மேன்பாட்டு கருத்திட்டத்திற்காக ரூபா 15.497 மில்லியன் ஏற்பாடு ஒதுக்கிக் கொள்ளப்பட்டிருந்தது. கிராமிய பாதைகள் 100,000 கி.மீ கருத்திட்டத்தின் கீழ் ரூபா 20,000 மில்லியனான மேலதிக ஏற்பாடு கிராமிய பாதைகள் மேன்பாட்டு கருத்திட்டத்திற்காக நெடுஞ்சாலைகள் அமைச்சின் மூலம் ஒதுக்கி வழங்கப்பட்டிருந்தது. எனினும் மீளாய்வாண்டில் பாலங்கள் கருத்திட்டத்திற்காக ஒதுக்கியிருந்த ஏற்பாட்டிலிருந்து ரூபா 8,381 | ஏற்றுக் கொள்கிறேன். 2021 ஆண்டினுள் அபிவிருத்தி செய்ய எதிர்பார்த்த தூரம் கி.மீ 2839 ஆன போதும், 2021.12.31 திகதி வேலைகள் பூர்த்தி செய்யப்பட்ட தூரம் கி.மீ 465.25 ஆகும். நிர்மாணிக்கும் தளம் பௌதீக ரீதியாக பொருத்தமின்மை, சீமெந்து உள்ளிட்ட மூலப் பொருட்களின் விலைகள் அடிக்கடி அதிகரித்தமை, அபிவிருத்தி | திட்டமிட்ட காலப் பகுதியினுள் கருத்திட்டங்களை துரிதமாக பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | |
|---|---|
| மில்லியன் அதாவது 88 சதவீதம் செலவிடப்பட்டிருக்காததுடன் 2022 பெப்ரவரி 03 திகதி மேலே கிராமிய பாதை கருத்திட்டத்திற்காக ஒதுக்கிய மொத்த ஏற்பாடான ரூபா 35,497 பணத்திலிருந்து ரூபா 7,018 மில்லியன் ஆன கருத்திட்டங்களின் வேலைகள் மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. அது மொத்த ஏற்பாட்டின் 19.6 சதவீதம் மாத்திரமானது. மேலும் அபிவிருத்தி செய்ய திட்டமிட்டிருந்த 2839 கி.மீ தூர பாதைகளில் கி.மீ 536 இன் வேலைகள் மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் அது எதிர்பார்த்த இலக்கின் 18.87 சதவீதம் மாத்திரமானது. | வேலைகளில் ஈடுபட்ட ஊழியர்கள் கொவிட் - 19 தொற்றாளர்களானமை போன்ற தாக்கங்கள் காரணமாக எதிர்பார்த்த பெறுபேற்றை அடைந்து கொள்ள முடியவில்லை. |

**3.1.2 கருத்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதங்கள்**

பின்வரும் அவதானங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | பாலங்கள் கருத்திட்டத்தின் கீழ் மீளாய்வாண்டில் குறைந்த கிரய 1,000 பாலங்கள் மற்றும் வாகனம் போக்குவரத்து செய்யக்கூடிய 438 பாலங்களை இரண்டு கட்டத்தின் கீழ் நிர்மாணிக்க அரச அபிவிருத்தி மற்றும் நிர்மாண கூட்டுத்தாபனம் (SD&CC) மற்றும் பாதை அபிவிருத்தி அதிகார சபைக்கு ஒப்பந்ங்கள் வழங்கப்பட்டிருந்தன. கட்டம் ஐ இன் கீழ் 149 பாலங்களிற்காக அரச அபிவிருத்தி மற்றும் நிர்மாண கூட்டுத்தாபனத்திற்கு (SD&CC) ரூபா 438 மில்லியன் முற்பணம் செலுத்தப்பட்டிருந்த போதும், 2021 திசெம்பர் 31 திகதியளவிலும் 33 பாலங்கள் மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் பௌதீக முன்னேற்றம் 50 சதவீதத்திலும் குறைந்த பாலங்களின் எண்ணிக்கை 71 ஆகயிருந்தது. கட்டம் ஐஐ கீழ் 2021 நவம்பர் மற்றும் திசெம்பர் மாதங்களில் 158 பாலங்களை நிர்மாணிக்க மேற்குறிப்பிட்ட நிறுவனத்திற்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்ததுடன் அவற்றில் அதிகமானவைகளை 06 மாதங்களில் பூர்த்தி செயய் வேண்டிய போதும் 2022 பெப்ரவரி 28 திகதியளவிலும் எந்தவொறு பாலத்தினதும் நிர்மாணங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை | கொவிட் தொற்று நிலைமை காரணமாக வேலைத் தளங்கள் தற்காலிகமாக மூடப்பட்டமை, பெறும்பாளான நிர்மாண நடவடிக்கைகள் கஷ்ட பிரதேசங்களில் அமைந்துள்ளமை, போக்குவரத்து கடினம், மூலப்பொருள் பற்றாக்குறை, மூலப்பொருட்களின் விலை அதிகரிப்பு, மழைக் காலம் போன்ற சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டி ஏற்பட்டிருந்தது. | திட்டமிட்ட பிரகாரம் ஏற்பாடுகளை பயன்படுத்தி எதிர்பார்த்த செயலாற்றலை அடைந்து கொள்ள கவனம் செலுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | கட்டம் II கீழ் பாதை அபிவிருத்தி அதிகார சபைக்கு வழங்கப்பட்டிருந்த 121 பாலங்களில் 68 பாலங்களின் முன்னேற்றம் 10 சதவீதத்திலும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. | - மேற்படி - | - மேற்படி - |

**3.2 நட்டங்களும் சேதங்களும்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| கி.மீ 75,129 மாத்திரம் செலுத்தி இருக்கையில் அவசர விபத்திற்குள்ளாகி இருந்த இலக்கம் CAU 0786 கொண்ட வாகனத்தை 2021 ஜனவரி மற்றும் மார்ச் மாதங்களில் கூட்டுத் தொகை ரூபா 6,145,452 செலவில் அமைச்சின் மூலம் திருத்த வேலைகள் மேற்கொண்டிருந்த போதும் அச் செலவை காப்புறுதி கம்பனியிடமிருந்து மீள்நிரப்ப நடவடிக்கை எடுக்காததால் அரசிற்கு அப்பெறுமானத்தால் நட்டம் ஏற்பட்டிருந்தது. எவ்வாறாயினும் அவ்விழப்பு பற்றி இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணம் 104 பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இலக்கம் CAU 0786 கொண்ட மேசடிஸ் பென்ஸ் வாகனத்திற்கு அவசர விபத்தொன்று ஏற்பட்டதாக வாகனத்தின் சாரதியினால் இவ் அமைச்சிற்கு எவ்வித அறிவிப்பும் செய்யவில்லை. அதனால், இம் மோடார் வாகனத்தின் விபத்து தொடர்பான எவ்வித தகவல்களும் இவ் அமைச்சிற்கு வெளிப்படுத்தப்படவில்லை என தயவுடன் அறிவிக்கிறேன். | நிதிப்பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுத்து நட்டத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.3 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் அவதானங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
| --- | --- | --- | --- |
| (அ) | அமைச்சின் முக்கிய நோக்கமாக பாதையின் இரு புறங்களிலும் மரம் நடும் வேலைத் திட்டத்தை இனங்கண்டிருந்ததுடன் ஒரு கன்றை நடுவதற்காக செய்திருந்த தேறிய செலவு ரூபா 41 ஆனது. எவ்வாறாயினும் அந்நோக்கத்திற்கு முரணாக பாதை இரு புறங்களிலும் நடுவதற்கு பரிந்துரைக்கப்படாத மரங்களை நடல் மற்றும் கன்றுகளை பகிர்தளிப்பதற்காக மீளாய்வாண்டில் கூட்டுத் தொகை ரூபா 763,500 அதாவது ஒரு கன்றிற்காக ரூபா 925 ஆன தேறிய செலவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | பாதை இரு புறமும் துரு செவன வேலைத் திட்டத்தின் கீழ் 2021 ஆண்டில் சிங்கள பண்டிகைக்காக மதிப்பிற்குரிய அமைச்சரின் ஆலோசனையின் மீது செயற்படுத்தப்பட்ட கன்றுகளை நடும் வேலைத் திட்டத்தில் பொருளாதார பயிர் மற்றும் பழப் பயிர் பகிர்ந்தளிக்கப்பட்டன. | அமைச்சின் நோக்ங்களை நிறைவேற்ற செயற்படுகையில் பொருளாதார ரீதியாக சாதகமான நிலைமையை கருத்திற் கொள்ள வேண்டியமை. |
| (ஆ) | கிராமிய பாலங்கள் நிர்மாணிக்க அமைச்சிற்கு கிடைத்திருந்த முன்மொழிவுகளை விஞ்ஞான முறைமையொன்றின் ஊடாக முன்னுறிமை அடிப்படையில் இனங்காண்பதற்கு இரண்டு நிறுவனங்களுக்கு ரூபா 31.62 மில்லியன் வழங்கப்பட்டிருந்தது. அதன் | பல்கலைக்கழகத்தினால் தெரிவு செய்யப்பட்டிருந்த சில முன்னுரிமையான முன்மொழிவுகளை 2021 ஆண்டில் செயற்படுத்த இயலாதிருந்தது. எவ்வாறாயினும் நிதி ஏற்பாடு கிடைக்கும் விதத்தில் எதிர்காலத்தில் | - மேற்படி - |

| | |
| --- | --- |
| பிரகாரம் அந்நிறுவனங்களினால் 06 மாவட்டங்கில் நிர்மாணங்கள் மேற்கொள்ள வேண்டிய 6,432 பாலங்களை இனங்கண்டு அதை தொடர்பான அறிக்கையொன்றை முன்வைத்திருந்த போதும், அப்பாலங்களிற்கிடையில் 2021 திசெம்பர் 31 திகதியன்று 13 பாலங்கள் மாத்திரம் நிர்மாணிப்பதற்கு தெரிவு செய்யப்பட்டிருந்ததனால் மேல் இரண்டு நிறுவனங்களிற்காக செலவிட்டிருந்த பணம் சிக்கனமற்ற செலவொன்றாக காணப்பட்டது. | முன்னுரிமையான முன்மொழிவுகளை செயற்படுத்த எதிர்பாரக்கிறேன். |

**4. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளல்.**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| ஐக்கிய நாடுகளின் நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்திற்கு இணங்கும் வகையில் அமைச்சின் மூலம் 2 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் இனங்காணப்பட்ட போதிலும், அந்த நோக்கங்களை அடைந்து கொள்வதற்கான இலக்குகள் மற்றும் செயலாற்றுகை சுட்டிகளை இனங்கண்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், கிராம பாதைபி பிரிவிற்கு உரியதாக மாத்திரம் இலக்குகள் மற்றும் செயலாற்றுகை சுட்டிகளை இனங்கண்டிருந்ததுடன் அச் செயலாற்றுகை சுட்டிகளின் முன்னேற்றத்தை பரிசோதிக்கையில் மொத்த பாதைகள் மற்றும் பாலங்கள் நிர்மாண முன்னேற்றம் 49 சதவீதத்திற்கு குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. அமைச்சின் முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் நிதிரீதியான தடைகள், மூலப்பொருள் தட்டுப்பாடு மற்றும் விலை மாற்றங்கள் முன்னேற்றத்திற்கு நேரடியாக தாக்கம் செலுத்தியதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | பதில வழங்கப்படவில்லை. | இனங்கண்டிருந்த நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு உரிய படிமுறைகளை எடுக்க வேண்டும். |

**5. மனித வள முகாமைத்துவம்.**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட 64 பதவிகள் காணப்பட்டதுடன் அதில் முறையே சிரேஷ்ட நிலையில் 08 பதவிகளிலும், மூன்றாம் நிலையில் ஒரு பதவியிலும் மற்றும் இரண்டாம் நிலையில் 22 பதவிகளிலும் வெற்றிடங்கள் காணப்பட்டன. | ஏற்றுக் கொள்கிறேன். | அமைச்சின் தேவையின் பிரகாரம் ஆட்சேர்ப்பு மேற்கொள்ள வேண்டும். |